//தனி கவனம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 3761 /ஆ4/2023 நாள் 07.09. 2023

பொருள் : தேர்வுகள்– தமிழ் மொழி இலக்கியத் திறனறிவுத் தேர்வு அக்டோபர் 2023 –15.10.2023 அன்று நடைபெறவுள்ள தேர்விற்கு –பள்ளி மாணவர்கள் விவரங்கள் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்தல் –தொடர்பாக

பார்வை : 1.அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.012929/ டி(3)/2023 நாள் 07.09.2023

2. இவ்வலுவலகம் இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள் 05.09.2023

================

பார்வை–1 ல் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் செயல்முறைகளின் படி தமிழ் மொழி இலக்கியத் திறனறிவுத் தேர்வு அக்டோபர் 2023 15.10.2023 அன்று நடைபெறவுள்ள தேர்விற்கு விண்ணப்பிக்கும் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வது தொடர்பான அறிவுரைகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து வகை (அரசு/நகரவை /ஆதிதிராவிட நலம்/ நிதியுதவி/ மெட்ரிக்/ CBSE/ICSE உட்பட)மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| தமிழ்நாடு மொழி இலக்கியத் திறனறித் தேர்வு 2023–2024 | |
|---|---|
| மாணவர்கள் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்யும் தேதி | 05.09.2023 to 20.09.2023 |
| மாணவர்கள் விண்ணப்பங்களை பள்ளித்தலைமை ஆசிரியரிடம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 20.09..2023 |
| தேர்வுக்கட்டணம் | ரூ.50/- |
| தேர்வு நாள் | 15.10.2023 (ஞாயிற்றுக்கிழமை) |
| பள்ளித்தலைமை ஆசிரியர் விண்ணப்பங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்ய கடைசி நாள் | 11.09.2023 to 20.09.2023 |
| தேர்வுக் கட்டணம் ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டிய கடைசி நாள் | 21.09.2023 |
| Summary Report மற்றும் Fees Receipt அரசு தேர்வுகள் உதவி இயக்ககத்தில் சமர்பிக்க வேண்டிய நாள் | 25.09.2023 –க்குள் |

இணைப்பு : பார்வை–1 கடிதம்

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்:
அனைத்து வகை (அரசு/நகரவை /ஆதிதிராவிட நலம்/ நிதியுதவி/ மெட்ரிக்/ CBSE/ICSE உட்பட)மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்:

- மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார் ) அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் தெரிவிக்கலாகிறது.
- மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.